**தொடன்கொட பிரதேச சபை - 2023**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொடன்கொட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தொடன்கொட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் தேறிய புத்தகப் பெறுமதி ரூபா 46,981 ஆன கணனி மற்றும் ரூபா 103,656 ஆன பாத்திரங்கள் மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்து கிடைத்த நட்டம் முறையே ரூபா 46,381 மற்றும் ரூபா 98,261 நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தத் தொகை வைப்புக்களிலிருந்து விடுவிக்கப்பட்டு வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் கிடைத்த மூலதன மானியம் ரூபா 14,079,510 ஆக இருந்த போதிலும் அது விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் ரூபா 100,421,017 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒட்டுமொத்த நிதிக்கூற்றுக்களுக்கு இதன் மூலம் தாக்கம் ஏற்படவில்லை. | மூலதன மானியம், விரிவான வருமானக் கூற்று சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,483,543 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,401,881 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 5,650,000 | 5,918,307 | 5,388,770 | 915,621 | 15,455,600 | 14,785,167 | 13,682,609 | 1,102,558 |
| (ii) | வாடகை | 1,468,200 | 1,440,600 | 1,440,350 | 37,800 | 2,735,600 | 2,193,940 | 2,156,390 | 37,550 |
| (iii) | அனுமதி ப்பத்திரக் கட்டணம் | 1,550,000 | 1,628,800 | 1,630,750 | - | 500,300 | 318,850 | 318,500 | - |
| (iv) | ஏனைய வருமான ம் | | | | | 129,300,078 | 211,451,934 | 148,159,403 | 63,292,531 |
| | மொத்தம் | 8,668,200 | 8,987,707 | 8,459,870 | 953,421 | 147,991,578 | 228,749,891 | 164,316,902 | 64,432,639 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஆதனவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரி காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 175 ஆதனவரி உரிமையாளர்களிடமிருந்து 01 இற்கும் 02 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் அறவிவேண்டிய நிலுவை ரூபா 175,246 தொகையும், 49 ஆதனவரி உரிமையாளர்களிடமிருந்து 02 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்து ரூபா 63,889 தொகையும், 44 ஆதனவரி உரிமையாளர்களிடமிருந்து 03 இற்கும் 05 வருடங்களும் இடையிலான காலத்தில் இருந்து ரூபா 61,242 தொகையும், 65 ஆதனவரி உரிமையாளர்களிடமிருந்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற நிலுவை ரூபா 187,281 தொகையும் ஆகும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) ஏனைய வருமானம்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2023 திசம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 8,470,087 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 82,076,795 ஆகும். | அறவிட வேண்டிய தொகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வாடகை உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 03 இன் கீழ் மாதாந்த வாடகைத் தொகை செலுத்த வேண்டிய முறை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை செய்யப்பட்ட மாதாந்த வாடகை எவ்வளவு என காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும். | வாடகை உடன்படிக்கை சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) தொடன்கொட பொதுச் சந்தை தொகுதியில் கடை இலக்கம் 12 மற்றும் 13 குறித்துரைத்த கையளித்தல் கட்டணம் அறவிட்டு வாடகை உரித்து திருத்துவதற்காக 2023 யூன் 27 ஆம் திகதிய முகாமைத்துவக் குழு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கையளித்தல் கட்டணம் அறவிட்டு உடன்படிக்கை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2024.06.06 ஆம் திகதிக்கு முன்னர் கடை கையளித்தல் கட்டணம் செலுத்தப்படாதிருக்கு மாயின் புதிய வாடகையாளருக்கு கடை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கையளித்தல் கட்டணத்தை அறவிட்டு உடன்படிக்கை செய்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சப்புக்கஹவத்த பொதுச் சந்தைத் தொகுதியின் கடை இலக்கம் 14 இல் 10 மாதங்கள் நிலுவை வாடகையான ரூபா 25,000 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறிவிடப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் கடை வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) ரூபா 4,954,698 செலவில் நிர்மாணிக்கப்பட்ட இயற்கை உணவகம் 2023 செப்டெம்பர் மாதம் முதல் பயனற்றுக் காணப்பட்டதுடன் முன்னைய வாடகையாளரால் செலுத்த வேண்டிய நிலுவை வாடகை ரூபா 125,000 மற்றும் நிலுவை மின்சாரப் பட்டியல் ரூபா 32,000 என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறிவிடப்பட்டிருக்கவில்லை. | 2024.07.31 ஆந் திகதிக்கு முன்னர் ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சட்டரீதியான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். | - மேற்படி - |
| (இ) தொடன்கொட பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குரிய இலங்கை சுற்றுலா சபையின் கீழ் பதிவு செய்துள்ள 05 ஹோட்டல்கள் காணப்பட்ட போதிலும் அனுமதிப்பத்திர கட்டணம் அறவிட வேண்டியதாக ஒரு ஹோட்டலில் இருந்து மாத்திரம் இனங்காணப்பட்டிருந்ததுடன் மிகுதியான 04 சுற்றுலா ஹோட்டல்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு பௌதீக இருப்பை உறுதிப்படுத்தி கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விடுமுறை விடுதிகளில் நீண்டகாலத்தில் இருந்து அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனத்திற் கொள்ளாமல் அந்த நிறுவனத்தில் புதிதாக நிரமாணிக்கப்பட்ட கட்டிடத்திற்கான திட்டம் 2019 ஆம் ஆண்டின் போது சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது அந்தக் கட்டிடத்திற்காக தரச் சான்றிதழும் விநியோகிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டங்கள், விதிகளுக்கு இணங்காத நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 143 காணிகளில் 54 காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த நடவடிக்கைகள் 2024 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பூர்த்திசெய்யப்படும். | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படுகின்ற சபைக்கு சொந்தமான டெக்டெர் வண்டி மற்றும் பௌஸர் என்பன சபையின் பேரில் கையேற்கப்பட்டிருக்க வில்லை. | கையேற்பதற்கான கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் கையேற்கப்படல் வேண்டும். |
| (இ) | 2016 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்படுகின்ற மோட்டார் கிரேடரை விற்றுத் தீர்ப்பதற்காக 2023 மே மாதம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விற்றுத்தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2024.08.31 ஆம் திகதிக்கு முன்னர் இந்த செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு கொம்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. | விளைவற்ற சொத்துக்களை விற்றுத்தீர்த்தல் வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 திசம்பர் மாதம் கழிவுப் பொருள் தளத்தில் களஞ்சியம் நிர்மாணிப்பதற்குரிய கிரயம் மதிப்பீடு தயாரிக்கும் போது 2023 யூன் 13 ஆம் திகதி மேல் மாகாண பிரதம செயலகத்தில் பொருட்களின் விலைப்பட்டியல் வீதத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளப்படாமல் ஒப்பந்தகாரருக்கு ரூபா 59,929 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தல் இவ்வாறான தாமதங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான விலை வீதத்தின் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |